முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா. 2 நாள். 03.12.2019

| அ.வ.எண். | 193/2015 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயராஜ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் மருந்துகடை நடத்தி வருகிறேன். அதை தவிர வேறு தொழில் எதுவும் செய்யவில்லை. நான் லேவாதேவி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியை எனக்கு அவர் பக்கத்தில் கடை வைத்திருந்தது மூலமாக தெரியும். கடன் வாங்குவதற்கு பிரதிவாதி மட்டும் வந்தார். அப்போது பகல் 12 மணி இருக்கும். வாதி 11 மணி அளவில் கடைக்கு வந்துவிட்டு 12 மணி அளவில் வாதியும் பிரதிவாதியும் சேர்ந்து எனது கடைக்கு வந்தார்கள். வாதிக்கு எழுதப்படிக்க தெரியும். புரோநோட்டை நான் தான் நிரப்பினேன். புரோநோட்டு படிவத்தை படித்து பார்த்து நிரப்பினேன். மற்றொரு சாட்சி ஜெயராஜ் திருச்சிற்றம்பலத்தில் உள்ளார். அவர் எல்ஐசி ஏஜெண்ட். பிரதிவாதியின் தம்பி மதனசிவராஜை தெரியும். அவர் மணல்மேடு பேரூராட்சி துணைத்தலைவராக இருந்தார். மதனசிவராஜ் என்னிடம் கடன் ரூ.50,000/- பெற்றிருந்தார் என்றாலும் வாதியிடம் ரூ.80,000/- கடன் பெற்றிருந்தார் என்றாலும் அதற்காக மதனசிவராஜ் பிரதிவாதியின் ஆவணங்களை வாதியிடம் கொடுத்தார் என்றாலும் சரியல்ல. 25.04.2014 அன்று புரோநோட்டை எழுதினேன். நான் வைத்திருந்த பேனாவில் தான் பிரதிவாதி கையெழுத்து செய்தார். பிரதிவாதி கொடுத்த ஆவணத்தை ந்ா்ன படித்து பார்த்தேன். அது கேஸ் கம்பெனிக்கு அருகில் உள்ள திடலை பொறுத்து ஏற்பட்ட கிரய ஆவணம் ஆகும். பிரதிவாதி மீது ஒருதலைபட்ச உத்தரவு நிறைவேற்று மனு தாக்கல்

செய்த விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் கடன் வாங்கிய நபர்களை விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம். நானும் வாதியும் மற்றொரு சாட்சி ஜெயராஜூம் சேர்ந்து லேவாதேவி தொழில் செய்து வருகிறோம் என்றாலும் அதனால் தான் என் கடையில் வைத்து பிராமிசரி நோட்டு எழுதப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி மதனசிவராஜ் மீது மணல்மேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எனது கடைக்கு வரவில்லை என்றாலும் கடன் பெறவில்லை என்றாலும் பிராமிசரி நோட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல. பிராமிசரி நோட்டு மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மதனசிவராஜ் ரூ.25,000/- தர வேண்டியுள்ளது என்றாலும் அதை பின்னால் தருவதாக சொன்னதால் பிரதிவாதியின் ஆவணத்தை வைத்து மோசடியாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.